பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**13 12 2025** **SATURDAY** **7.15 PM**

ஆகாஷவாணி

*தலைப்புச் செய்திகள்*

1. கேரள உள்ளாட்சித் தேர்தலில் தேசிய ஜனநயாக கூட்டணியின் வெற்றிக்கு வாக்களித்த அம்மாநில மக்களுக்கு பிரதமர் திரு நரேந்திர மோடி நன்றி தெரிவித்துள்ளார்.

2. நக்சல் தீவிரவாதம் வரும் மார்ச் மாதத்திற்குள் முடிவுக்கு கொண்டுவரப்படும் என்று உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.

3. உலக புகழ் பெற்ற கால்பந்தாட்ட வீரர் லயனல் மெஸ்ஸியின் கொல்கத்தா வருகையின்போது பாதுகாப்பு ஏற்பாடுகளை கண்காணிக்க மேற்குவங்க அரசு தவறிவிட்டதாக பிஜேபி குற்றம் சாட்டியுள்ளது.

4. ஐ எஸ் தீவிரவாத அமைப்புடன் தொடர்புடைய வழக்கு ஒன்றில் அமலாக்க இயக்குனரக அதிகாரிகள் இன்று 40-க்கும் மேற்பட்ட இடங்களில் சோதனை மேற்கொண்டனர்.

5. உலகக்கோப்பை ஸ்குவாஷ் அரையிறுதியில் இந்தியா — எகிப்து அணிகளுக்கு இடையிலான ஆட்டம் சென்னையில் தற்போது நடைபெற்று வருகிறது.

-- இனி விரிவான செய்திகள் ---

<<<<<>>>>>

கேரள உள்ளாட்சித் தேர்தலில் தேசிய ஜனநயாக கூட்டணியின் வெற்றிக்கு வாக்களித்த அம்மாநில மக்களுக்கு பிரதமர் திரு நரேந்திர மோடி நன்றி தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், திருவனந்தபுரம் மாநகராட்சியில் தேசிய ஜனநாயக கூட்டணி அதிக இடங்களை வென்றிருப்பது அம்மாநில அரசியலில் முக்கிய தருணமாக தாம் கருதுவதாக கூறியுள்ளார்.

திருவனந்தபுரத்தின் வளர்ச்சிக்காகவும், மக்களுக்கு கூடுதல் வசதிகள் கிடைத்திடவும் பிஜேபி தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி பாடுபடும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

இந்த தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணியின் வெற்றிக்கு வழிவகுத்த தொண்டர்களுக்கும் பிரதமர் திரு நரேந்திர மோடி தமது நன்றியை தெரிவித்துள்ளார்.

<<<<<>>>>>

கேரள உள்ளாட்சித் தேர்தலில் பிஜேபி தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி திருவனந்தபுரம் மாநகராட்சியில் அதிக இடங்களை கைப்பற்றியுள்ளது.

திருவனந்தபுரம் மாநகராட்சிக்கான தேர்தலில், மொத்தம் உள்ள **101** கவுன்சில்களில் தேசிய ஜனநாயக கூட்டணி **50** இடங்களை வென்றுள்ளது.

மாநிலத்தில் ஆளும் சிபிஎம் தலைமையிலான இடதுசாரி ஜனநாயக கூட்டணி, கடந்த தேர்தலைவிட குறைவான இடங்களையே வென்றுள்ளது.

இம்மாநிலத்தில் **367** கிராம பஞ்சாயத்துகளை காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய ஜனநாயக முன்னணி வென்றுள்ளது.

அடுத்ததாக இடதுசாரி ஜனநாயக முன்னணி **234** கிராம பஞ்சாயத்துகளை கைப்பற்றியுள்ளது.

பாலக்காடு, நகராட்சியில் உள்ள **53** இடங்களில **25** இடங்களை தேசிய ஜனநாயக கூட்டணி வென்றுள்ளது.

**14** மாவட்ட பஞ்சாயத்துகளில் **7**-ல் ஐக்கிய ஜனநாயக முன்னணியும், ஆறில் இடதுசாரி ஜனநாயக முன்னணியும் வெற்றிபெற்றுள்ளன.

மேலும், பல இடங்களுக்கான முடிவுகள் தொடர்ந்து அறிவிக்கப்பட்டு வருகிறது.

<<<<<>>>>>

நக்சல் தீவிரவாதம் வரும் மார்ச் மாதத்திற்குள் முடிவுக்கு கொண்டுவரப்படும் என்று உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.

சட்டீஸ்கர் மாநிலம் ஜெகதர்பூர் நகரில் பஸ்தார் ஒலிம்பிக் நிறைவு விழாவில் உரையாற்றிய அவர், ஏராளமான நக்சலைட்டுகள் தீவிரவாதத்தை கைவிட்டு, இயல்பு வாழ்க்கைக்கு திரும்பி உள்ளதையும் சுட்டிக்காட்டினார்.

எஞ்சியுள்ளவர்களும் ஆயுதங்களை கைவிட்டு, இயல்பு வாழ்க்கைக்கு திரும்ப வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

தீவிரவாதத்தை கைவிட்டு, சரணடைபவர்களுக்கு போதிய உதவிகள் செய்யப்பட்டு வருவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

பழங்குடியின மக்கள் அதிகம் வசிக்கும் பஸ்தார் பகுதியில் மேம்பாட்டுக்கான திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அடுத்த ஐந்தாண்டுகளில் இப்பகுதிக்கு தேவையான அடிப்படை வசதிகள் அனைத்தும் செய்து தரப்படும் என்று அவர் கூறினார்.

வீட்டுவசதி, மின்சாரம், குடிநீர், கல்வி, சுகாதாரம் போன்ற வசதிகள் சட்டீஸ்கரில் ஏழு மாவட்டங்களுக்கு செய்து தரப்படுவதாகவும் திரு அமித் ஷா தெரிவித்தார்.

<<<<<>>>>>

ஐ எஸ் தீவிரவாத அமைப்புடன் தொடர்புடைய Saqib Nachan வழங்கு தொடர்பான விசாரணையில் அமலாக்க இயக்குனரக அதிகாரிகள் இன்று நாட்டின் பல்வேறு மாநிலங்களில் உள்ள 40-க்கும் மேற்பட்ட இடங்களில் சோதனை மேற்கொண்டனர்.

மும்பை, தில்லி, கொல்கத்தா, பிரயாக்ராஜ், டாமன், ரத்னகிரி உள்ளிட்ட பகுதிகளில் இந்த சோதனை நடத்தப்பட்டது.

9 கோடியே 70 லட்சம் ரூபாய்க்கு மேற்பட்ட பணம், தங்க நகைகள் மற்றும் தங்கக் கட்டிகள் இந்த சோதனையின்போது கைப்பற்றப்பட்டன.

சட்டவிரோத பணப்பரிவர்த்தனைக்காக பயன்படுத்தப்பட்டதாக சந்தேகிக்கப்படும் 25 வங்கிக் கணக்குகள் தொடர்பான ஆவணங்களும் கைப்பற்றப்பட்டன.

மேலும், தீவிரவாத நடவடிக்கைகளோடு தொடர்புடைய ஆவணங்களும், மின்னணு கருவிகளும் கைப்பற்றப்பட்டதாக அமலாக்க இயக்குனரகம் தெரிவித்துள்ளது.

<<<<<>>>>>

மேற்குவங்க மாநிலத்தில் நடைபெற்ற வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணிகளின் அடிப்படையில் 58 லட்சத்துக்கும்

மேற்பட்டோர் வரைவு வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்படுவார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை அம்மாநிலத்தில் 92 புள்ளி நான்கு ஒன்று சதவீத வாக்காளர் கணக்கீட்டுப் படிவங்கள் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

99 புள்ளி ஒன்பது ஒன்பது சதவீத வாக்காளர்களின் விவரங்கள் இதுவரை சேகரிக்கப்பட்டுள்ளதாகவும் தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

<<<<<>>>>>

அர்ஜென்டினாவை சேர்ந்த உலக புகழ்பெற்ற கால்பந்தாட்ட வீரர் லயனல் மெஸ்ஸி இன்று கொல்கத்தாவில் ஒரு நிகழ்ச்சியில் கலந்துகொண்டார்.

சால்ட் லேக் அரங்கில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் மெஸ்ஸியை காண்பதற்கு ஏராளமான கால்பந்தாட்ட ரசிகர்கள் அலைமோதியதால் தள்ளு முள்ளு ஏற்பட்டது.

இதனை கட்டுப்படுத்தும் நோக்கில், பாதுகாவலர்கள் மெஸ்ஸியை நிகழ்ச்சி தொடங்கிய 22 நிமிடங்களிலேயே பாதுகாப்பாக அழைத்து செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது.

இதனால், அவரை காண முடியாத ரசிகர்கள் கடும் அதிருப்திக்கு உள்ளாகி, அங்குள்ள பொருட்களை சேதப்படுத்தினர்.

கூட்டத்தை சமாளிப்பதற்கு போதிய பாதுகாப்பு ஏற்பாடுகள் இல்லை என பார்வையாளர்கள் குற்றம் சாட்டினர்.

இந்நிலையில், மேற்குவங்க காவல்துறையினர் மெஸ்ஸி கலந்துகொண்ட நிகழ்ச்சியின் அமைப்பாளர் **Satadru Dutta**-கைது செய்து விசாரித்து வருகின்றனர்.

தற்போது நிலைமை கட்டுக்குள் இருப்பதாகவும் தெரிவித்தனர்.

இதனிடையே, மேற்குவங்க முதலமைச்சர் செல்வி மம்தா பானர்ஜி, மெஸ்ஸியின் நிகழ்ச்சி ஏற்பாட்டு குழுவினர் முறையாக பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொள்ளவில்லை என்றும், இதனால் ஏற்பட்ட அசௌகரியத்திற்கு தாம் வருத்தம் தெரிவிப்பதாகவும் கூறியுள்ளார்.

<<<<<>>>>>

மெஸ்ஸியின் வருகையின்போது கொல்கத்தா நகரில் மேற்கொள்ளப்பட்ட பாதுகாப்பு ஏற்பாடுகளை மாநில அரசு கண்காணிக்க தவறிவிட்டதாக பிஜேபி செய்தித்தொடர்பாளர் திரு சுதான்ஷு திரிவேதி குற்றம் சாட்டியுள்ளார்.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், மேற்குவங்க மாநிலத்தில் முதலமைச்சர் செல்வி மம்தா பானர்ஜி

தலைமையிலான அரசின் நிர்வாக திறமையின்மையை இது காட்டுவதாக கூறினார்.

தேசிய ஜனநயாக கூட்டணி ஆட்சியில் இல்லாத மாநிலங்களான கர்நாடகா, தமிழ்நாடு, உள்ளிட்ட மாநிலங்களில் இதுபோன்ற பாதுகாப்பு குறைபாடுகள் அவ்வப்போது நிகழ்வதாக அவர் தெரிவித்தார்.

சட்டம் — ஒழுங்கு நிலைமையை பாதுகாப்பதில் அக்கறை செலுத்தாமல், ஆட்சி அதிகாரத்திற்கு மட்டுமே முக்கியத்துவம் அளித்து செயல்பட்டு வருவதால்தான் இதுபோன்ற நிகழ்வுகள் ஏற்படுவதாக அவர் கூறினார்.

திருவனந்தபுரம் மாநகராட்சியில் தேசிய ஜனநாயக கூட்டணி அதிக இடங்களை பெற்றுள்ளது மகிழ்ச்சி அளிப்பதாகவும் திரு சுதான்ஷு திரிவேதி கூறினார்.

<<<<<>>>>>

பாரம்பரிய மருத்துவ முறைகளில் செயற்கை நுண்ணறிவை பயன்படுத்தும் முன்னோடி நாடாக இந்தியா உருவெடுத்து வருவதாக ஆயுஷ் அமைச்சகத்தின் செயலர் திரு ராஜேஷ் கோச்சா தெரிவித்துள்ளார்.

உலக சுகாதார அமைப்பின் உச்சிமாநாடு குறித்து செய்தி நிறுவனம் ஒன்றுக்கு பேட்டியளித்த அவர், இந்தியாவின் பாரம்பரிய மருத்துவ முறைகளை இணைப்பது குறித்து உலக சுகாதார அமைப்பு சர்வதேச தொலைத்தொடர்பு யூனியன் மற்றும் உலக அறிவுசார் சொத்துரிமை அமைப்பு ஆகியவை கொண்ட செயற்குழு அமைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

<<<<<>>>>>

உற்பத்தித்துறையில் சிறப்பாக செயல்பட்டு வரும் மகளிர் சுயஉதவிக்குழுவினருக்கு நபார்டு வங்கி மூலம் திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளிக்கப்பட உள்ளதாக அதன் மூத்த பொது மேலாளர் திரு ஆனந்த் தெரிவித்துள்ளார்.

தமிழகத்தின் தூத்துக்குடியில் நபார்டு வங்கி உதவியோடு பயிற்சி பெறுபவர்களின் உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்துவதற்காக **Stall in Mall** திட்டம் தொடங்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

***(Sound Byte — லஷ்மணன் - 42 Sec. )***

<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

உலகக்கோப்பை ஸ்குவாஷ் அரையிறுதியில் இந்தியா — எகிப்து அணிகளுக்கு இடையிலான ஆட்டம் தற்போது நடைபெற்று வருகிறது.

சென்னையில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் முதல் ஆட்டத்தில் இந்தியாவின் வேலவன் செந்தில்குமார் **7-1, 7-3, 7-6** என்ற செட் கணக்கில், **Ibrahim Elkabbani** -ஐ வென்றார்.

**-----------------**

ஒடிஷா மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Isharani Baruah, Unnati Hooda** ஆகியோர் இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளனர்.

மகளிர் ஒற்றையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் **Isharani Baruah 18-21, 21-7, 21-7** என்ற செட் கணக்கில், **Tanya Hemanth-**ஐ வென்றார்.

மற்றொரு ஆட்டத்தில் **Unnati Hooda 18-21, 21-16, 21-16** என்ற செட் கணக்கில் **Tasnim Mir-**ஐ வென்றார்.

இப்போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவில் கிரண் ஜார்ஜும் இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

**<<<<<END>>>>>**